"வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை.

1283

# 1956
ஜூலை & ஆகஸ்டு

1283 / 3-56

# இந்து வார்சு உரிமைச் சட்டம் (1956)

தமிழில் விளக்கம்

With Full English Text of

# THE HINDU SUCCESSION ACT (1956)

All Rights Reserved.

விலை ரூ. 1.

THE V
TAMIL LAW

## "வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப் பத்திரிகையாகப் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

நீங்கள் "வக்கீல்" பத்திரிகையின் சந்தாதாராகச் சேர்ந்துவிட்டீர்களா?
இல்லாவிட்டால் உடனே சேரவும்.

ஒவ்வொரு மாதமும் புதிதாக வரும் சட்ட திட்டங்களை நீங்கள் இப்பத்திரிகையிலிருந்து தமிழில் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3.
ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5.
ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— "வருட சந்தா" என்பது 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். வருட சந்தாதாரர்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர்மூலம்
மானேஜர், "வக்கீல்" காரியா
தபால் பெட்டி 26, கும்பகோண
— என்ற விலாசத்துக்

'வக்கீல்'

8 SEP 1956 MADRAS

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| றிப்புகள் ... | 5 |
| இந்து வார்சு உரிமைச் சட்டம் (1956) தமிழில் விளக்கம் ... | 7—46 |
| க்ஷன் | |
| 1. சட்டத்தின் பெயரும் அமுலில் இருக்கும் இடங்களும். ... | 8 |
| 2. இச் சட்டத்தால் கட்டுப்பட்டவர்கள் யார்? ... | 8 |
| 3. சில சொற்களின் பொருள் ... | 10 |
| "தாயாதி" ... | 10 |
| "பந்து" ... | 11 |
| "வழக்கம்" ... | 11 |
| "முழு ரத்தக் கலப்பு" ... | 12 |
| "பாதி ரத்தக் கலப்பு" ... | 12 |
| "உதரக் கலப்பு" ... | 12 |
| "வார்சு" ... | 12 |
| "உயில் எழுதி வைக்காமல் இறப்பவர்" | 13 |

4. இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருப்பவை செல்லாது. ...

5. பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய சொத்துக்களுக்கும் வேறு சில சொத்துக்களுக்கும் இச் சட்டம் கிடையாது. ... 16

6. பிரிபடாத இந்துக் குடும்பச் சொத்துக்களில் உள்ள பாத்தியம் எப்படி மாறும் என்பது பற்றி. ...

7. தார்வாடு, தாய்வழி, குடும்பம், கவரு, இல்லம் இவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களின் பாத்தியம். ... 2

8. ஆண் இந்து ஒருவர் இறந்தால் அவருடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார் என்பது பற்றிய பொது விதிகள் ... 21

9. ஷிடியூலில் கண்ட முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு வார்சுகளுக்குள் வார்சு கிரமம் ... 22

முதல் வகுப்பு வார்சுகள் இவர்கள் தாம். இவர்களின் எண்ணிக்கை 12. ... 23

10. முதல் வகுப்பு வார்சுகளுக்குள் பாகம் எப்படி? ... 24

11. இரண்டாம் வகுப்பு வார்சுகள் யார்? இவர்களுக்குள் பாகம் எப்படி? ... 27

12-13. தாயாதிகளுக்குள்ளும் பந்துக்களுக்குள்ளும் வார்சு கிரமம் எப்படி? ...

14. இந்து ஸ்திரீகள் அடையும் சொத்துக்

6 SEP 1956 MADRAS

களில் அவர்களுக்குப் பூர்ண உரிமை உண்டு. ... 31

ஆனல் இனம் சாசனம் உயில் வேறு பத்திரங்கள் கோர்ட்டு டிக்ரி சிவில் கோர்ட்டு உத்தரவு அல்லது மத்தியஸ்தத் தீர்ப்பு இவை மூலம் இந்து ஸ்திரீக்குச் சொத்துக்களில் குறைவான பாத்தியங்கள் கொடுக்கப்பட்டிருந்தால்—அது செல்லும் ... 32

15. இந்து ஸ்திரீ ஒருவள் இறந்தால் அவளுடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார் என்பது பற்றிய பொது விதிகள் ... 34

ஆனல், தகப்பன் அல்லது தாயின் வார்சாக இந்து ஸ்திரீ அடைந்த சொத்துக்களுக்கு வார்சுகிரமம் வேறு... 35

கணவன், மாமனர் இவர்களின் வார்சாக இந்து ஸ்திரீ அடைந்த சொத்துக்களுக்கும் வார்சு கிரமம் வேறு. ... 35

16. இறந்த ஸ்திரீயின் சொத்துக்களை வார்சுகள் எந்த வரிசைக் கிரமத்தில் அடைவார்கள். — வார்சுகளுக்குள் பங்கு வீதம் எப்படி ? ... 37

17. மருமக்கத்தாயம் — அளிய சந்தானம் இம் முறைகளைப் பின்பற்றுபவர்களுக்கு வார்சு கிரமத்தில் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. ... 38

18. வார்சு உரிமைபற்றிய பொது விதிகள்... 39

19. இரண்டு அல்லது அதிக வார்சுகள் இருந்தால். ... 40

| | | |
|---|---|---|
| 20. | கருவில் இருக்கும் குழந்தையின் பாத்தியம். ... | 41 |
| 21. | ஒரே சமயத்தில் இறப்பவர்கள். ... | 41 |
| 22. | முதல் வகுப்பு வார்சுகளில் ஒருவர் சொத்தைப் பராதீனம் செய்ய உத்தே சித்தால்—அதை வாங்க மற்றவர் களுக்கு முன் உரிமை உண்டு. ... | 42 |
| 23. | குடியிருப்பு வீடுகளைப்பற்றிய விசேஷ விதிகள். ... | 43 |
| 24. | மறுமணம் செய்துகொண்ட சில விதவைகளுக்கு வார்சு உரிமை கிடையாது. ... | 44 |
| 25. | கொலை செய்தவருக்கு வார்சு பாத் தியம் கிடையாது. ... | 44 |
| 26. | மதம் மாற்றியவர்களுடைய சந்ததி களுக்கும் வார்சு பாத்தியம் கிடையாது... | 45 |
| 27. | வார்சு பாத்தியத்தை ஒருவர் இழக் கும்போது அடுத்த வார்சு யார்? ... | 45 |
| 28. | வியாதி அல்லது அங்க ஹீனத்தால் வார்சு பாத்தியம் போய்விடாது. ... | 45 |
| 29. | வார்சுகளே இல்லாவிட்டால் சொத்துக்கள் சர்க்காரைச் சேரும். ... | 46 |
| 30. | உயில் எழுதும் உரிமை. ... | 46 |
| 31. | சில சட்டங்கள் ரத்தாயின. ... | 46 |

இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் ஆங்கில வாசகம்.

English Text of *The Hindu Succession Act (1956)* ... 47-64


---

216522

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 8 ஜூலை — ஆகஸ்டு 1956 இதழ் 4 & 5

## வேறு உடை!

உங்களுடைய அன்பையும் ஆதரவையும் கவர்ந்த ஒருவர் உங்களுடன் பழகும்போது அவர் எவ்விதமான உடை அணிந்திருக்கிறார் என்பதையா நீங்கள் உற்று கவனிக்கப் போகின்றீர்கள்! அவர் எவ்விதமான உடையில் தோன்றினாலும் உங்களுடைய அன்பும் ஆதரவும் அவருக்குக் குன்றாது. சில நிர்வாக சௌகரியங்களை உத்தேசித்து முக்கியமான ஒரு சட்ட விளக்கம் அடங்கிய "வக்கீல்" இதழைத் தனியாகவோ அல்லது இரண்டு இதழ்களைச் சேர்த்தோ இனி இதைப்போன்ற புத்தக வடிவத்தில் பிரசுரம் செய்ய உத்தேசித்திருக்கிறோம். இவ்விதப் புத்தக வடிவமுள்ள இதழ்களை "வக்கீல்" பத்திரிகையின் வருட சந்தாதார்களாகச் சேர்ந்து பேராதரவு அளித்துவரும் அன்பர்களுக்கு மட்டில் பாதி விலைக்குக் கணக்குச் செய்து அனுப்பப்

படும். உதாரணமாக—மிக முக்கியத்துவம் வாய்ந்த "இந்து வார்சுரிமைச் சட்ட விளக்கம்" அடங்கிய இந்த இதழின் விலை ரூ. ஒன்று. ஆனால் வருட சந்தாதார்களுக்கு இது இரண்டு இதழ்களாகவே, அதாவது, அணா 8 ஆகவே கணக்குச் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இது விஷயம் முன்பே "வக்கீல்" பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுமிருக்கிறது. இவ்வருடத்திற்குள் வரப் போகும் "இந்து மைனர் கார்டியன் சட்டம்" — "சென்னை நியாயவாரச் சட்டம்" போன்ற சில முக்கிய சட்டங்களும் இவ்விதமே பிரசுரம் செய்யப்படும். ஒரே ஒரு சட்டத்தின் விளக்கம் மட்டில் இல்லாமல் பல விஷயங்கள் அடங்கிய "வக்கீல்" இதழ்கள் எப்பொழுதும் போலவே பெரிய உருவத்தில் வெளிவரும்.

---

## இந்து அல்லாதவர்களும் தெரிந்து கொள்வது நல்லதாகும்.

இவ்விதழில் அடங்கிய இந்து வார்சுரிமைச் சட்டத்தை இந்துக்கள் மட்டுமின்றி இந்து அல்லாதவர்களும் தெரிந்து வைத்துக் கொள்ளுவது அவசியமாகும். வியாபாரம், வர்த்தகம், லேவாதேவி, போன்ற பல விஷயங்களில் இந்துக்களுக்கு விசேஷமாக உள்ள வார்சுச் சட்டங்களை முஸ்லீம்களும், முஸ்லீம்களுக்கு விசேஷமாக உள்ள வார்சுச் சட்டங்களை இந்துக்களும், இதைப் போலவே மற்ற மதத்தினரும், தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

---

# இந்து வார்சு உரிமைச் சட்டம் (1956)

[The Hindu Succession Act 1956. இச்சட்டம் இந்திய பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1956-ம் வருடத்திய 30-வது மத்தியச் சட்டம். இச்சட்டத்திற்கு 17—6—1956ல் ஜனாதிபதி அவர்கள் அங்கீகாரம் அளித்தனர். இச்சட்டம் 18—6—56 தேதியுள்ள இந்திய சர்க்கார் கெஜட்டிலும் 4—7—1956 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கீழே இருப்பது இச்சட்டத்தின் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பு அல்ல. சட்டத்தில் உதாரணங்கள் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் இச்சட்ட ஷரத்துக்களைப் புரியும்படி விளக்கம் செய்யும் பொருட்டு இச்சட்ட விளக்கத்தில் சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இச்சட்டத்தில் சந்தேகங்கள் தோன்றும் இடங்களில் சட்டத்தின் ஆங்கில வாசகத்தைக்கொண்டே அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். அதற்காக இச்சட்ட ஷரத்துக்கள் முழுமையும் ஆங்கிலத்தில் உள்ளபடி அப்படியே இத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.]

## பீடிகை

ஒவ்வொரு சட்டத்திலும் முதலில் பீடிகை (Preamble) ஒன்று இருக்கும். சட்டத்தின் நோக்கம் என்ன என்பது அப்பீடிகையில் குறிப்பிடப்படும். இச்சட்டத்தின் பீடிகையில்—இச்சட்டமானது, "இந்துக்களிடையே உயில் என்ற மரண சாசனத்தின் மூலம் விநியோகம் செய்யப்படாத சொத்துக்களுக்கு வார்சு பாத்தியங்களைத் திருத்தவும் தொகுக்கவும்" இயற்றப்பட்டிருக்கிறதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## சட்டத்தின் பெயரும் அமுலில் இருக்கும் இடங்களும்.

செக்ஷன் 1

(1) இச்சட்டத்திற்கு 1956-ம் வருடத்திய இந்து வார்சுரிமைச் சட்டம் என்று பெயர். (2) இச்சட்டமானது ஜம்மு-காஷ்மீர் நீங்கலாக அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும்.

[இச்சட்டம் அமுலுக்கு வந்ததேதி:— சில சட்டங்களில் அச்சட்டமானது எந்தத் தேதி முதல் அமுலுக்கு வரும் என்றோ, அல்லது அது அமுலுக்கு வரும் தேதியை மத்திய சர்க்கார் குறிப்பிடலாமென்றோ இருக்கும். இச்சட்டத்தில் அவ்வித ஷரத்து இல்லை. ஆகையால் இச்சட்டத்திற்கு ஜனாதிபதி அவர்கள் அங்கீகாரம் அளித்த தேதியாகிய 17-6-1956 முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்து விட்டது.]

## இச்சட்டத்தால் கட்டுப்பட்டவர்கள் யார் யார்? இந்துக்கள், பௌத்த மதத்தினர், ஜெயினர்கள், சீக்கியர்களுக்கும் இச்சட்டம் உண்டு.

இச்சட்டம் அடியில் கண்டவர்களைக் கட்டுப்படுத்தும். அவர்களாவன:—

செக்ஷன் 2

(1) (a) இந்து மதத்தைத் தழுவியவர்கள். வீரசைவர்கள், லிங்காயத்துக்கள், பிரும்ம சமாஜத்தினர், பிரார்த்தனர்கள், ஆரிய சமாஜத்தினர் உள்பட இந்துமதத்தின் எந்த ரூபத்தையும் வளர்ச்சியையும் பின்பற்றுபவர்களும் இந்துக்களில் சேர்ந்தவர்களே. (b) புத்தமத்தினர் ஜெயினமதத்தினர் சீக்கியர்கள். (c) மேற்கண்டவர்களைத் தவிர, முஸ்லீமாகவோ, கிறிஸ்தவராகவோ, பார்சியாகவோ, ஜூ என்ற யூத மதத்தினராகவோ அல்லாத மற்றவர்களுக்கும் இச்சட்டம் உண்டு. ஆனால் இச்சட்டம் ஏற்படாவிட்டால், தங்களுக்கு இச்சட்டத்தில் கண்ட விஷயங்களைப்

பொருந்து, இந்துச் சட்டமோ, இந்துச் சட்டத்தின் பகுதியாகக் கருதப்படும் தொன்று தொட்ட பழக்க வழக்கமோ அனுஷ்டானத்தில் இல்லை என்று ருசுப்பிப்பவர்களுக்கு இச் சட்டம் கிடையாது.

## விளக்கம்:—இந்து மதத்தினர், புத்த மதத்தினர், ஜெயின மதத்தினர், சீக்கிய மதத்தினர் என்பவர்கள் யார்?

கீழே கண்டவர்கள்தாம் முறையே இந்துக்கள் புத்த மதத்தினர், ஜெயினர்கள் அல்லது சீக்கியர்கள் எனப்படுவார்கள். அவர்களாவன:—(a) தாய் தகப்பன் இருவரும் இந்துக்களாகவோ, புத்தமதத்தினராகவோ, ஜெயின மதத்தினராகவோ, சீக்கிய மதத்தினராகவோ இருந்து (அவர்கள் சட்ட பூர்வமாகத் திருமணம் செய்துகொண்டவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள்; (b) தாய்தகப்பன் இருவர்களில் ஒருவர் மட்டில் இந்துவாகவோ, புத்த மதத்தினராகவோ, ஜெயினராகவோ, சீக்கியராகவோ இருந்து அவர்களுக்குப் பிறந்து அவ்விசப்பெற்றோரின் குடும்பம் அல்லது சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தினராக வளர்க்கப்பட்ட குழந்தைகள்; (c) மதமாற்றத்தால் இந்து மதத்தையோ, புத்த மதத்தையோ, ஜைன மதத்தையோ, சீக்கிய மதத்தையோ தழுவியவர்கள்; முதலில் இம்மதத்தினராக இருந்து வேறு மதத்திற்குப் போய், மறுபடியும் மதம் மாற்றி மேலே கண்ட மதங்களைத் தழுவியவர்கள்.

(2) மேலே கண்ட விதிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 366 (25) என்ற ஷரத்தின்படி ஷிட்யூல் வகுப்பினர் என்ற மலை ஜாதியினருக்குக் கிடையாது. ஆனால் அவர்களுக்கும் இதே விதிகள் உண்டென்று உத்தரவு பிறப்பிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(3) இச்சட்டத்தில் "இந்து" என்று சொல்லப்படும் போது, இச்சட்டம் யார் யாருக்கு உண்டு என்று இந்த செக்ஷனில் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவர்கள் இந்து மதத்தைத் தழுவியவர்களல்லாவிட்டாலும் அவர்களையும் குறிக்கும்.

## சில சொற்களின் பொருள்

செக்ஷன் 3

இச்சட்டத்தில் சில சந்தர்ப்பங்களில் வேறு விதமாக அர்த்தம் செய்யவேண்டியதாக இருந்தாலொழிய, கீழே குறிப்பிடப்படும் சில வார்த்தைகளுக்கு பின் வருமாறு அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். அவை யாவன:—

### "தாயாதி"

(a) "தாயாதி" (agnate - ஞாதி கோத்திரஜர் அல்லது பங்காளி)—இரு நபர்கள் ரத்த பாசத்தாலோ அல்லது சுவீகாரத்தினலோ முற்றிலும் ஆண் வழி உறவினர்களாக இருந்தால் ஒருவருக்கு மற்றவர் "தாயாதி" எனப்படுவார்.

(உதாரணம் (1):—ஒருவருடைய தகப்பனின் தகப்பனின் மகனின் மகன், அவருடைய தாயாதி ஆவார். ஏனென்றால் இருவரும் ரத்தபாசத்தால் ஆண் வழியாகவே உறவினர்.

உதாரணம் (2):—ஒருவருடைய தகப்பனின் தகப்பனின் மகனின் சுவீகார மகன், — அவருடைய தாயாதியாவார். ஏனென்றால், இருவரும் சுவீகாரத்தினுல் இருந்தால்கூட ஆண் வழியாகவே உறவினர்.)

(b) "அளிய சந்தானச் சட்டம்"—இச்சட்டம் ஏற்படாவிட்டால் 1949-ம் வருடத்தியச் சென்னை அளிய சந்தானச் சட்டமானது எந்த நபர்களுக்குப் பொருந்துமோ அந்த நபர்களுக்கான சட்டத்தைக் குறிக்கும்.

"பந்து"

(c) "பந்து" (cognate)— இரு நபர்கள் ரத்த பாசத்தாலோ அல்லது சுவீகாரத்தினுலோ முற்றிலும் ஆண்வழி அல்லாத உறவினர்களாக இருந்தால் ஒருவருக்கு மற்றவர் "பந்து" எனப்படுவார்.

(உதாரணம் (1);—ஒருவருடைய தகப்பனின் தகப்பனின் மகளின் மகன் — அவருடைய 'பந்து' ஆவார். ஏனென்ருல் இருவரும் ரத்த பாசத்தால் உறவினராக இருந்தாலும் முற்றிலும் ஆண்வழி உறவினரல்ல.

உதாரணம் (2):— ஒருவருடைய தகப்பனின் தகப்பனின் மகளின் சுவீகார மகன் — அவருடைய "பந்து" ஆவார். ஏனென்ருல் இருவரும் சுவீகாரத்தினுல் உறவினர்கள்தான். ஆனுல் முற்றிலும் ஆண்வழி உறவினரல்ல.)

## "வழக்கம்" (மாமூல்) அல்லது "ஆசாரம்" (Custom - usage)

(d) ஒரு பிரதேசத்திலுள்ள இந்துக்களிடையேயோ, அல்லது இந்துக்களாகிய ஒரு வகுப்பு அல்லது ஒரு இனத்தைச் சேர்ந்தவரிடையேயோ, அல்லது ஒரு இந்துக் கூட்டம் அல்லது குடும்பத்திலோ தொன்று தொட்டகாலமாகத் தொடர்ச்சியாகவும் ஒரே விதமாகவும் ஒரு விதி அனுஷ்டிக்கப்பட்டு வந்த காரணத்தினுல், அதுவே சட்டமாகப் பாவிக்கப்பட்டு வந்தால் அதைத்தான் "வழக்கம்" (மாமூல்) அல்லது "ஆசாரம்" என்று சொல்லப்படும். ஆனுல் அவ்வித விதியானது நிச்சயமானதாக இருக்கவேண்டும்; நியாயமற்றதாகவும், பொது நன்மைக்கு முரணுகவும் இருக்கக் கூடாது. மேலும் ஒரு குடும்பத்திற்கு மட்டில் பிரயோகிக்கத்தக்க விதியாக இருந்தால் அது அக்குடும்பத்தினரால் கை விடப்படாமல் இருந் திருக்க வேண்டும்.

## "முழு ரத்தக் கலப்பு" (Full Blood)
## "பாதி ரத்தக் கலப்பு" (Half Blood)

இரண்டு நபர்கள் ஒரு பொதுவான மூதாதையின் ஒரே மனைவி மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாக இருந்தால் அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு முழு ரத்தக் கலப்புள்ள உறவினர் எனப்படுவர்.

செக்ஷன் 3 (e)

பொதுவான ஒரு மூதாதையின் வெவ்வேறு மனைவியர் மூலமாய் ஏற்பட்ட சந்ததிகளில் தோன்றியவர்களாயிருந்தால், பாதி ரத்தக் கலப்புள்ள உறவினர் என்று சொல்லப்படுவர்.

## "உதரக் கலப்பு" (Uterine Blood)

இரண்டு நபர்கள் ஒரு பொதுவான பெண் மூதாதையின் வெவ்வேறு கணவர்கள் மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாக இருந்தால், அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு உதரக் கலப்புள்ள உறவினர் எனப்படுவார்.

விளக்கம்: மேலே 'மூதாதை' என்று சொல்லப்படுவதில் தகப்பன் சேர்ந்தவரே. 'பெண் மூதாதை' என்பதில் தாய் சேர்ந்தவளே.

[உதாரணமாக: ஒரு தகப்பனுக்கு ஒரே மனைவி மூலம் பிறக்கும் இரண்டு மகன்களும் ஒருவருக்கொருவர் 'முழு ரத்தக் கலப்பு' உள்ளவர்கள். அத்தகப்பனுக்கு மூத்த மனைவி மூலம் பிறந்த மகனும் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த மகனும் ஒருவருக்கொருவர் 'பாதி ரத்தக் கலப்பு' உள்ளவர்கள். ஒரே தாய்க்கு முதல் கணவன் மூலம் பிறந்த மகனும், இரண்டாவது கணவன் மூலம் பிறந்த மகனும் ஒருவருக்கொருவர் 'உதரக் கலப்பு' உள்ளவர்கள்.]

## வாரிசு (Heir)

(f) உயில் மூலம் சொத்துக்களை விநியோகம் செய்யாமல் இறக்கும் ஒரு நபருடைய சொத்துக்களை இச்சட்ட ஷரத்துக்

களின்படி அடைய உரிமை உள்ள ஒருவர் ஆணுக இருந்தாலும் பெண்ணுக இருந்தாலும் அவர் இறந்தவருடைய "வார்சு" எனப்படுவார்.

## உயில் எழுதி வைக்காமல் இறப்பவர் (Intestate)

(g) சட்டப்படி அமுலுக்கு வரக்கூடிய 'உயில்' என்ற மரண சாசனத்தின் மூலம் சொத்துக்களை விநியோகம் செய்யாமல் ஒருவர் இறந்தால் அச்சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவர் "உயில் எழுதிவைக்காமல் இறப்பவர்" —(Intestate) எனப்படுவார்.

[உதாரணம் (1):—ஒருவருக்கு இரண்டு வீடுகள் இருக்கின்றன. தம்முடைய ஆயுளுக்குப்பிறகு ஒரு வீட்டை மட்டில் தம்முடைய உறவினர் ஒருவர் அடையும்படி "உயில்" எழுதி வைத்துவிட்டு, அவர் இறந்து போகிறுர். "உயில்" மூலம் விநியோகம் செய்யப்படாத மற்ெருரு வீடு சம்பந்தப்பட்ட வரையில் அவர் "உயில் எழுதி வைக்காமல் இறப்பவர்" (Intestate) எனப்படுவர். அவ்வீட்டை இச்சட்டப்படிக்கான வார்சுகள் அடைவார்கள்.

உதாரணம் (2);—மேற்கண்ட உதாரணத்தில் இருக்கும் "உயில்" என்ற மரண சாசனத்தில் யாரும் சாட்சி போடவில்லை. குறைந்தது இரண்டு சாட்சிகளாவது போடப்படாத "உயில்" சட்டப்படி செல்லாது. ஆகையால் இவருடைய இரண்டு வீடுகளும் இச்சட்டப்படிக்கான வார்சுகளையே சேரும்.

உதாரணம் (3):—முன்கண்ட உதாரணத்தில் இருக்கும் "உயில்" எழுதியவர் அதை நல்ல ஞாபக சக்தியுடன் "உயில்" எழுதவில்லை என்று ருசு ஆகின்றது. உயில் செல்லாது. அவருடைய இரண்டு வீடுகளும் இறந்தவருக்கு இச்சட்டப்படி யார் வார்சுகளோ அவர்களைத்தான் சேரும்.]

(h) "மருமக்கத்தாயச் சட்டம்"—என்பது, இச்சட்டம் இயற்றப்படாவிட்டால் சென்னை மருமக்கத்தாயச் சட்டம்

(1932), திருவாங்கூர் நாயர்ச் சட்டம், திருவாங்கூர் எழவாச் சட்டம், திருவாங்கூர் நாஞ்சிநாடு வெள்ளாளர் சட்டம், திருவாங்கூர் க்ஷத்திரியர் சட்டம், திருவாங்கூர் கிருஷ்ணன்வாக மருமக்கத்தாயச் சட்டம், கொச்சி மருமக்கத்தாயச் சட்டம் அல்லது கொச்சி நாயர்ச் சட்டம்—இச்சட்டங்கள் எந்த எந்த நபர்களுக்கு இருந்ததோ—அந்த நபர்களுக்குப் பொருந்தும் சட்டத்தைக் குறிக்கும். திருவாங்கூர், கொச்சி அல்லது சென்னை ராஜ்யத்தில் பெரும்பாலாக வசிப்பவர்களும், இச்சட்டம் இயற்றப்படாவிட்டால் ஸ்திரீ வழி வம்சவழி மூலம் வார்சு பாத்தியம் கொண்டாடுபவர்களுமான நபர்களுக்கான விதிகளும் இச்சட்டத்தில் "மருமக்கத்தாயச்சட்டம்"— என்று சொல்லப் படுகிறது. இதில் அளிய சந்தானச் சட்டம் சேர்ந்ததல்ல. (i) "நம்பூத்ரிச் சட்டம்"—என்றால், இச்சட்டம் இயற்றப்படாவிட்டால், 1932-ம் வருடத்திய சென்னை நம்பூத்ரிச்சட்டம், கொச்சி நம்பூத்ரிச் சட்டம், திருவாங்கூர் நம்பூத்ரி பிராமணர் சட்டம் ஆகிய சட்டங்கள் எந்த நபர்களுக்குப் பொருந்துமோ அந்த நபர்களுக்கான சட்டத்தைக் குறிக்கும்.

## "உறவு முறை" "Related"

(j) "உறவு" என்பது சட்ட பூர்வமாக (legitimate kinship) ஏற்படும் உறவு முறையைத்தான் குறிக்கும். ஆனால் சட்ட பூர்வமாகத் திருமணமாகாதவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவர்களுடைய தாய்க்கும் அவர்களுக்குள் ஒருவருக்கொருவருக்கும் உறவினர்களாவார்கள். அவர்களுடைய சட்ட பூர்வமான சந்ததிகள் (அதாவது அவர்கள் சட்டபூர்வமாகத் திருமணம் செய்துகொண்டு அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகள்) அவர்களுக்கும், சந்ததிகளுக்குள் ஒருவருக்கொருவரும், உறவினராவார்கள்.

[உதாரணம் (1):—ஒருவருக்கு, அவருடைய சகோதரரின் மனைவியின் மகன் உறவினர் எனப்படுவார்.

உதாரணம் (2):—ஒருவருக்கு அவருடைய சகோதரரின் வைப்பு ஸ்திரீயின் மகன் உறவினரல்ல.

உதாரணம் (3):—ஒருவருக்குத் திருமணமான மனைவி மூலம் ஒரு மகனும், வைப்புஸ்திரீ மூலம் இரண்டு மகன்களும் இருக்கின்றனர். இச்சட்டப்படி அவருடைய மனைவி மூலம் பிறந்த மகன்தான் அவருடைய உறவினராகும். வைப்புஸ்திரீயின் மகன்கள் அவருடைய உறவினரல்ல. ஆனால் வைப்புஸ்திரீயும் அவளுடைய மகன்களும் ஒருவருக்கொருவர் உறவினர்களாவார்கள்.

குறிப்பு:—இச்சட்டத்தில் எந்த எந்த உறவுமுறை உள்ளவர்கள்தான் வார்சுகள் என்று சொல்லப்படுவதால்—"உறவு முறை" என்பது மேலே கண்ட அர்த்தப்படி இருந்தால்தான் வார்சு பாத்தியம் ஏற்படும் என்பது கவனிக்கத்தக்கது.]

## இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருப்பவை செல்லாது.

(1) இச்சட்டத்தில் வியக்தமாக வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய (a) இச்சட்ட ஷரத்துக்களில் கண்டிருக்கும் அதே விஷயங்களைப்பற்றி அமுலில் இருந்த எந்த சாஸ்திர வாக்கியங்களும், விதிகளும், இந்துச்சட்ட வியாக்கியானங்களும், பழக்க வழக்கங்களும் இச்சட்டம் அமுலுக்கு வந்தவுடன் ரத்தாகும். (b) இச்சட்டம் வருவதற்குமுன்பு அமுலில் இருந்த மற்ற சட்டங்களும் இந்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருந்தால், செல்லாது.

செக்ஷன் 4

(2) ஆனால் விவசாய நிலங்களைத் துண்டாடுவதைத் தடுத்தோ, அல்லது அந்நிலங்களை வைத்திருப்பதற்கு ஒரு உயர்ந்த பட்சவரம்பு ஏற்படுத்தியோ, அல்லது அந்நிலங்களின் சாகுபடி பாத்தியங்களைப்பற்றியோ அவ்வப் பொழுது அமுலில் இருக்கும் எந்தச் சட்டங்களையும் இச்சட்டமானது பாதிக்காது.

## பதிவுத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய சொத்துக்களுக்கும் வேறு சில சொத்துக்களுக்கும் இச்சட்டம் கிடையாது.

(i) 1954-ம் வருடத்திய விசேஷ விவாகச் சட்டப்படி (Special Marriage Act 1954). பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்கள் இறந்துபோனாலும், அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகள் இறந்துபோனாலும் அவர்களுடைய சொத்துக்களுக்கு 1925-ம் வருடத்திய இந்திய வார்சுச் சட்டப்படி (Indian Succession Act 1925) வார்சு பாத்தியம் நிர்ணயம் செய்யப்படுமென்று விசேஷ விவாகச் சட்டத்தின் செக்ஷன் 21ல் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் இச்சட்டம் கிடையாது.

செக்ஷன் 5

(உதாரணம்:—இரண்டு இந்துக்கள் 1954ம் வருடத்திய விசேஷ விவாகச் சட்டப்படிப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். அவர்களுக்கு நான்கு ஆண் மக்கள் பிறக்கின்றனர். பதிவுத் திருமணம் செய்துகொண்ட தகப்பன் இறந்துவிட்டால் — அவருடைய சொத்துக்களில் 3ல் ஒரு பாகத்தை மனைவி அடைவாள். ஏனென்றால் 1925-ம் வருடத்திய இந்திய வார்சுச் சட்டத்தில் மனைவியின் பாகம் 3ல் 1 என்று இருக்கிறது. பாக்கி இரண்டு பங்கை நான்கு மகன்களும் அடைவார்கள். இச்சட்டப்படி மனைவிக்கும் நான்கு மகன்களுக்கும் சமபாகம் உண்டு. ஒவ்வொருவருக்கும் 5ல் 1 பாகம்தான் உண்டு. ஆனால் இச்சட்டம் பதிவுத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குக் கிடையாது. வார்சு கிரமத்திலும் சரி, பங்கு வீதங்களிலும் சரி, இவ்விரண்டு சட்டங்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன.)

## பழைய சமஸ்தான அரசர்களின் சொத்துக்கள்.

(ii) இந்திய சர்க்காருடன் ஏற்கனவே இருந்த இந்திய சமஸ்தானத்தின் அரசர்கள் செய்துகொண் டிருக்கும் ஒப்பந்தப் படியோ அல்லது இச்சட்டத்திற்குமுன் ஏற்பட்ட எந்தச் சட்டத்தின்படியோ ஒரே ஒரு வாரிசுக்கு மட்டில் வாரிசு பாத்தியம் ஏற்படக் கூடிய சொத்துக்களுக்கு இச்சட்டம் கிடையாது.

## கொச்சி ராஜ்யத்தில் உள்ள கோவிலகம் சொத்துக்கள்.

(iii) கொச்சி மகாராஜாவினுல் 29 - 6 - 1949 தேதியில் செய்யப்பட்ட அறிக்கைப்படி அரண்மனை நிர்வாக போர்டா ரால் நிர்வாகம் செய்யப்பட்டு வரும் வலியம்மதம்புரான் கோவிலகம் சொத்துக்களுக்கும் அரண்மனை நிதிக்கும். இச் சட்டம் கிடையாது.

## பிரிபடாத இந்துக் குடும்பச் சொத்துக்களில் உள்ள பாத்தியம் எப்படி மாறும் என்பது பற்றி.

பிரிபடாத (மிதாக்ஷரா) இந்துக் குடும்பச் சொத்துக்களில் பாத்தியமுள்ள ஒரு ஆண் இந்த பாகஸ்தரானவர், இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு இறந்தால், அவருடைய பாத்தியங்கள் அக்குடும்பத்திலிருக்கும் மற்ற பாகஸ் தர்களைச் (சர்வைவர்ஷிப் - Survivorship என்ற உரிமைப்படி) சேருமே ஒழிய அப்பாத்தியங்களுக்கு இச்சட்டம் கிடையாது. ஆனல் ஒரு விதி விலக்கு உண்டு. அதாவது, இறந்து போகும் குடும்ப பாகஸ்தருக்கு இச்சட்டத் தின் ஷிடியூலில் முதல் வகுப்பில் குறிப்பிடப்பட் டிருக்கும் பெண் உறவினரோ அல்லது அப்பெண் உறவினர் மூலம் பாத் தியம் கொண்டாடும் ஒரு ஆண் உறவினரோ இருந்தால் —

(செக்ஷன் 6)

பிரிபடாத குடும்பச் சொத்தில் இறந்த பாகஸ்தருக்குள்ள சொத்து பாத்தியங்களை இச்சட்டப்படிக்கான வார்சுகளே அடைவார்கள். இச்சந்தர்ப்பத்தில் 'சர்வைவர்ஷிப்' (survivorship) என்ற முறைப்படி சொத்து பாத்தியங்கள் மாறாது.

விவரணம் 1. இந்து (மிதாக்ஷரா) பாகஸ்தருடைய சொத்து பாத்தியங்கள் என்று இந்த ஷரத்தில் சொல்லப்படுவது என்ன என்றால், அப்பாகஸ்தர் இறக்கும் தருவாயில் அக்குடும்ப சொத்துக்களைப் பாகம் செய்து கொண்டால் அவருக்கு எவ்வளவு பாகம் கிடைக்குமோ அதைக் குறிக்கும்.

விவரணம் 2. பாகஸ்தர் இறக்கும் முன்பே குடும்பத்தை விட்டு பிரிந்து போனவர்களுக்கும், அவருடைய வார்சுகளுக்கும், இறந்தவருடைய சொத்தில் வார்சு பாத்தியம் கிடையாது.

[குறிப்பு:—பிரிபடாத இந்துக் குடும்பங்கள் சம்பந்தப் பட்டவரையில் செக்ஷன் 6 என்ற ஷரத்தானது மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய ஷரத்தாகும். குடும்பச் சொத்துக்கள் சம்பந்தமாக சென்னை ராஜ்யத்தில் அமுலில் இருக்கும் இந்துச் சட்ட முறைக்கு 'மிதாக்ஷரா'- எனப்பெயர். பிரிபடாத குடும்பச் சொத்துக்களைப் பொறுத்தமட்டில், எந்த பாகஸ்தரும் 'உயில்' என்ற மரண சாசனத்தின்மூலம் அச்சொத்துக்களை விநியோகம் செய்யமுடியாதென்று பழைய சட்டம் இருந்தது. பாகம் செய்துகொண்ட பிறகுதான் ஒருவர் அக்சொத்துக்களை 'உயில்' மூலம் விநியோகம் செய்யலாம் என்று இருந்தது. இச்சட்டத்தின் செக்ஷன் 30 என்ற ஷரத்தால் நிலைமை மாறிவிட்டது. இனி பிரிபடாத இந்துக் குடும்பத்தில் ஒரு பாகஸ்தருக்குள்ள சொத்துப் பாத்தியங்களை அப்பாகஸ்தர் உயில்மூலம் விநியோகம் செய்யமுடியும் என்பதை கவனிக்கவும்.

அவ்விதம் 'உயில்' எழுதிவைக்காமல் பிரிபடாத இந்துக் குடும்ப பாகஸ்தர் ஒருவர் இறந்தால் அவர் இறக்கும்போது அவருக்கு (1) பெண்மகளோ (2) மனைவியோ (3) தாயோ (4) முன்னதாக இறந்த மகனுடைய மகளோ (5) முன்னதாக

இறந்த மகளுடைய மகனோ (6) முன்னதாக இறந்த மகளுடைய மகளோ (7) விதவை மருமகளோ (8) முன்னதாக இறந்த மகனுடைய மகனும் முன்பே இறந்திருந்தால் அம்மகனுடைய மகளோ (9) ஷையாருடைய விதவையோ — ஆக மேற்கண்ட 9 உறவினர்கள் யார் இருந்தாலும் — இறந்துபோகும் பாகஸ்தருடைய சொத்தக்களுக்கு இச்சட்டப்படிதான் வார்சுகள் நிர்ணயம் செய்யப்படும். இவர்கள்தாம் முதல் வகுப்பில் கண்ட பெண் உறவினர்கள்.

உதாரணம் (1) :—ஒரு பிரிப்படாத இந்துக் குடும்பத்தில் நான்கு சகோதரர்கள் இருக்கின்றனர். ஒரு சகோதரர் இறந்து போகிறார். அவருக்கு மனைவியோ, தாயோ, ஆண்பெண் சந்ததியோ கிடையாது. இவருடைய சொத்து பாத்தியங்கள் மற்ற சகோதரர்களையே சேரும். இது முன்பு இருந்த சட்டம்தான்.

உதாரணம் (2) :—ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தில் நான்கு சகோதரர்கள் இருக்கின்றனர். ஒரு சகோதரர் இறந்து போகிறார். அவருக்குப் பெண்மகள் இருக்கிறாள். இறந்தவருடைய சொத்து பாத்தியங்கள் ஜாடாவும் பெண்மகளைச் சேரும். சகோதரர்களுக்கு ஒன்றும் கிடையாது. ஏனென்றால் 'மகள்' என்பவள் இச்சட்டத்தில் முதல் வகுப்பு வார்சு. இவள் இருப்பதால் இறந்தவருக்கு இச்சட்டப்படி வார்சுக் கிரமம் நிர்ணயம் செய்யப்படவேண்டும். இச்சட்டப்படி முதல்வகுப்பு வார்சான 'மகள்', இருக்கும்போது இரண்டாவது வகுப்பு வார்சான சகோதரர்களுக்கு வார்சு பாத்தியம் ஏற்படாது.

உதாரணம் (3):— பிரிபடாத ஒரு இந்துக் குடும்பத்தில் தகப்பனும் இரண்டு ஆண் மகன்களும் இருக்கின்றனர். ஒரு ஆண் மகன் பிரிந்து தனியே போய் விட்டான். பிறகு தகப்பன் இறக்கிறார். அவருக்கு மனைவி இருக்கிறாள். 'மனைவி' என்பவள் இச்சட்டத்தில் முதல் வகுப்பு வார்சு. மனைவி இருப்பதால் இவருடைய குடும்ப சொத்து பாத்தியங்களுக்கு

இச்சட்டப்படி யார் வார்சு என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இச்சட்டப்படி இறந்தவருக்கு அவருடைய மனைவியும் இரண்டு ஆண் மகன்களும்தாம் வார்சாவார்கள். சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் சமபாகம் வரும். ஆனால் ஒரு ஆண் மகன் முன்பே பிரிந்து போய் விட்டதால் செக்ஷன் 6-ன் படி அம்மகனுக்குக் குடும்ப சொத்தில் வார்சு பாத்தியம் கிடையாது. ஆகையால் இறந்தவருடைய சொத்துக்களை அவருடைய மனைவியும், பிரிபடாத ஆண் மகனும் மட்டில் சமபாகமாக அடைவார்கள்.]

## தார்வாடு, தாய்வழி, குடும்பம், கவரு, இல்லம் இவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களின் பாத்தியம்

(1) இச்சட்டம் ஏற்படாவிட்டால் மருமக்கத்தாயம் அல்லது நம்பூத்ரிச் சட்டத்தைப் பின்பற்றவேண்டிய இந்து ஒருவர் இச்சட்டம் வந்தபிறகு இறந்தால் அவருக்குத் தார்வாடிலோ தாய்வழி அல்லது இல்லத்திலோ உள்ள சொத்து பாத்தியங்களுக்கு இச்சட்டப்படி வார்சு பாத்தியம் நிர்ணயம் செய்யப்படுமே ஒழிய மருமக்கத்தாயச் சட்டப்படிக்கோ, நம்பூத்ரிச் சட்டப்படிக்கோ அல்ல.

செக்ஷன் 7

விவரணம்:—தார்வாடு, தாய்வழி, அல்லது இல்லத்தின் சொத்துக்களை இறந்தவருக்கு, அவர் இறக்கும் முன்னதாகப் பாகம் செய்து ஆளுக்கொரு பாகமாகக் கொடுத்திருந்தால் அவருக்கு என்னபாகம் கிடைத்திருக்குமோ அப்பாகம்தான் இறந்தவருடைய சொத்து பாத்தியமாகக் கருதப்படும்.

(2) இச்சட்டம் ஏற்படாவிட்டால், அளிய சந்தானச் சட்டத்தைப் பின்பற்றவேண்டிய இந்து ஒருவர், இச்சட்டம் வந்த பிறகு இறந்தால் அவருக்கு குடும்பத்திலோ, கவருவிலோ உள்ள பிரிபடாத சொத்து பாத்தியங்களுக்கு இச்சட்டப்படி

வார்சு பாத்தியம் நிர்ணயம் செய்யப்படுமே ஒழிய, அளிய சந்தானச் சட்டப்படிக்கல்ல.

விவரணம் :—குடும்பம் அல்லது கவருவின் சொத்துக்களை இறந்தவருக்கு, அவர் இறக்கும் முன்னதாகப் பாகம் செய்து ஆளுக்கொரு பாகமாகக் கொடுத்திருந்தால் அவருக்கு என்ன பாகம் கிடைத்திருக்குமோ அப்பாகம்தான் இறந்தவருடைய சொத்து பாத்தியமாகக் கருதப்படும்.

(3) 'ஸ்தானம்தார்' ஒருவர் இச்சட்டம் வந்த பிறகு இறந்தால் 'ஸ்தானம்' சொத்தானது அவர் இறக்குமுன் பாகம் செய்யப்பட்டு இறந்தவருக்கும் மற்றக் குடும்பத்தினருக்கும் ஆளுக்கொரு பாகமாகக் கொடுக்கப்பட்டதாக பாவிக்கப்பட்டு இறந்தவருடைய பாகத்தை அவருடைய வார்சுகளும், மற்ற பாகங்களை மற்ற குடும்ப அங்கத்தினர்களும் அடைவார்கள்.

விவரணம் :—ஸ்தானம்தாருடைய குடும்பம் என்பது அக்குடும்பத்தின் ஒவ்வொரு கிளையையும் குறிக்கும். அக்கிளை பிரிந்ததாக இருந்தாலும், பிரிபடாததாக இருந்தாலும் இச்சட்டம் ஏற்படாவிட்டால் அவற்றின் ஆண் அங்கத்தினர்களுக்கு ஸ்தானம் தாரராக வரக்கூடிய பாத்தியம் பழக்க வழக்கங்களின்படி இருந்தால் போதும்.

## ஆண் இந்து ஒருவர் இறந்தால் அவருடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார் என்பது பற்றிய பொது விதிகள்.

'உயில்' என்ற மரண சாசனத்தின் மூலம் தம்முடைய சொத்துக்களை விநியோகம் செய்யாமல் ஆண் இந்து ஒருவர் இறந்துபோனல், அவருடைய சொத்துக்களை இச்

செக்ஷன் 8 சட்டத்தில் கண்ட முறைப்படி அடியில்கண்ட வார்சுகள் அடைவார்கள். அதாவது, (a) முதலில் இச்சட்டத்தின் ஷெடியூலில் முதல் வகுப்பாக (class I) குறிப்பிடப்பட்ட உறவுமுறை உள்ள வார்சுகள் இறந்தவருடைய

சொத்துக்களை அடைவார்கள். (b) இரண்டாவதாக, அதாவது முதல் வகுப்பு வார்சுகளில் ஒருவர்கூட இல்லாவிட்டால், இச் சட்டத்தின் ஷிடியூலில் இரண்டாவது வகுப்பாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் உறவுமுறை உள்ள வார்சுகள் அச்சொத்துக்களை அடைவார்கள். (c) மூன்றுவதாக, முதல் இரண்டு வகுப்புக் களிலும் கண்டிருக்கும் வார்சுகள் ஒருவரும் இல்லாவிட்டால், இறந்தவருடைய தாயாதிகள் (ஞாதிகள் அல்லது பங்காளிகள்- agnates) அச்சொத்துக்களை அடைவார்கள். (d) கடைசியாக, தாயாதிகளும் இல்லாவிட்டால் இறந்தவருடைய சொத்துக் களை அவ்வுடைய பந்துக்கள் (cognates) அடைவார்கள். [இச் சட்டத்தில் இறந்தவருடைய வார்சுகள் மேற்கண்டபடி நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கின்றனர். ஷிடியூலில் கண்ட முதல் வகுப்பு வார்சுகள் இரண்டாம் வகுப்பு வார்சுகள் யார் யார் என்று அடுத்தபடியாக விளக்கப்பட்டிருக்கிறது.]

## ஷிடியூலில் கண்ட முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு வார்சுகளுக்குள் வார்சுக்கிரமம்

இச்சட்டத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கும் ஷிடி யூலில் முதல் வகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்சுகள் யாவ ரும்சேர்ந்து இறந்தவருடைய சொத்துக்களை அடை

செக்ஷன் 9

வார்கள். ஆனால் இரண்டாவது வகுப்பில் 9 பிரிவு கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்பு வார்சுகள் ஒருவரும் இல்லா விட்டால், இரண்டா வது வகுப்பின் முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்சுகள் தான் சொத்துக்களை அடைவார்கள். முதல் பிரிவில் ஒருவரும் இல்லாவிட்டால் இரண்டாவது பிரிவில் கண்டவர்கள் வார்சு களாவார்கள். இரண்டாவது பிரிவிலும் ஒருவரும் இல்லா விட்டால்தான் மூன்றுவது பிரிவில் கண்டவர்கள் வார்சாவார்

கள். இந்தக் கிரமப்படியே மற்ற பிரிவுகளில் கண்டிருப்பவர்கள் வார்சாவார்கள்.

## முதல் வகுப்பு வார்சுகள்:—

### மகன், மகள், விதவை, தாய், பேரன், பேத்தி, மகன் வழி கொள் பேரன் பேத்தி, விதவை மருமகள்

ஆண் இந்து ஒருவர் 'உயில்' மூலம் தம்முடைய சொத்துக்களை விநியோகம் செய்யாமல் இறந்து விட்டால் அவருடைய சொத்துகளை முதல் வகுப்பு வார்சுகள் அடைவார்கள் என்பதை கவனித்தோம். முதல் வகுப்பு வார்சுகள் யார் யார் என்ருல் — இறந்தவருடைய மகன், மகள், விதவை, தாய், இவர்களும் தகப்பனுக்கு முன்பே மகனோ மகனுடைய மகனோ அல்லது மகளோ இறந்துபோய் இருந்தால், அவர்களுடைய விதவைகளும், ஆண் பெண் மக்களுமாவார்கள்.

### முதல் வகுப்பு வார்சுகள் இவர்கள்தாம். இவர்களின் எண்ணிக்கை 12.

இறந்தவருடைய (1) மகன் (2) மகள் (3) விதவை (4) தாய் (5) முன்னதாகவே இறந்து போன மகனுடைய மகன் (6) முன்னதாகவே இறந்து போன மகனுடைய மகள் (7) முன்னதாகவே இறந்து போன மகளுடைய மகன் (8) முன்னதாகவே இறந்து போன மகளுடைய மகள் (9) முன்னதாகவே இறந்த மகனுடைய விதவை (10) முன்னதாகவே இறந்த மகனுடைய முன்னதாகவே இறந்த மகனுடைய மகன் (11) முன்னதாகவே இறந்த மகனுடைய முன்னதாகவே இறந்த மகனுடைய மகள் (12) முன்னதாகவே இறந்த மகனுடைய முன்னதாகவே இறந்த மகனுடைய விதவை.

## முதல் வகுப்பு வார்சுகளுள் பாகம் எப்படி?

செக்ஷன் 10 'உயில்' மூலம் சொத்துக்களை விநியோகம் செய்யாமல் இறந்து போகும் ஆண் இந்துவின் சொத்துக்களை முதல் வகுப்பு வார்சுகள் அடியில் கண்ட விதிகளின்படி அடைவார்கள்.

**விதி 1.** இறந்தவருடைய விதவைக்கு ஒருபாகம் உண்டு. இரண்டு அல்லது அதிகமான விதவைகள் இருந்தால் அவர்கள் யாவருக்கும் சேர்ந்து ஒரு பாகம்தான்.

**விதி 2.** இறந்தவருடைய மகன்கள், மகள்கள், தாய், ஒவ்வொருவருக்கும் ஒரு பாகம் உண்டு.

**விதி 3.** இறந்தவருடைய மகனோ மகளோ, முன்னதாகவே இறந்திருந்தால் இறந்துபோன ஒவ்வொரு மகன் அல்லது மகளுடைய கிளையில் கண்ட வார்சுகள் யாவருக்கும் சேர்ந்து ஒருபாகம்தான் உண்டு.

**விதி 4.** முன்னதாக இறந்துபோன மகனுடைய கிளையில் இருக்கும் வார்சுகளுக்குச் சொத்தை விநியோகம் செய்யும் போது—இறந்த மகனுடைய விதவைக்கும் (அல்லது விதவைகளுக்கும்) அவருடைய மகன்கள், மகள்கள், இவர்களுக்கும் சமபாகம் உண்டு. இறந்த மகளுடைய கிளையில் உள்ள வார்சுகள், அதாவது, அவளுடைய மகன்களுக்கும் மகள்களுக்கும் சமபாகம் உண்டு. (அதாவது ஒரு கிளைக்குக் கிடைக்கும் சொத்தை மேற் கண்ட பாகப்படி அக்கிளையிலுள்ளவர்கள் அடைவார்கள்.)

மேலே கண்ட விதிகளைச் சில உதாரணங்களைக் கொண்டு விளக்கலாம்:—

**உதாரணம் (1)** ஆண் இந்து ஒருவர் தம்முடைய சொத்துக்களை 'உயில்' மூலம் விநியோகம் செய்யாமல் இறந்து போகிறார். அவருக்கு ஒரு மனைவியும் ஒரு மகனும் உண்டு.

இறந்தவருடைய சொத்துக்களை அவ்விருவரும் சமபாகமாக அடைவார்கள்.

உதாரணம் (2) இறந்த இந்துவுக்கு ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உண்டு. இச்சட்டப்படி இறந்தவருடைய சொத்துக்களை மூன்று பாகமாகச் செய்து இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பாகத்தை அடைவார்.

உதாரணம் (3) இறந்த இந்துவுக்கு ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், தாய் இவர்கள் உண்டு. இறந்தவருடைய சொத்துக்களை நான்கு பாகங்களாகச் செய்து இவர்கள் நால்வரும் ஆளுக்கு ஒரு பாகமாக அடைவார்கள்.

உதாரணம் (4) இறந்த இந்துவுக்குத் தாய், இரண்டு மனைவிகள், இரண்டு ஆண் மகன்கள், இரண்டு பெண் மக்கள் உண்டு. சொத்துக்களை 6 பாகங்களாகச் செய்து தாய்க்கு ஒரு பாகம்; இரண்டு மனைவிகளுக்கும் சேர்ந்து ஒரு பாகம்; ஒவ்வொரு ஆண் மகனுக்கும் ஒரு பாகம்; ஒவ்வொரு பெண் மகளுக்கும் ஒரு பாகம் உண்டு.

உதாரணம் (5) இறந்தவருக்கு தாயும் ஒரு பெண் மகளும்தான் உண்டு. இறந்தவருடையச் சொத்துக்கள் இரண்டு பாகங்களாகச் செய்யப்பட்டு தாய் ஒரு பாகத்தையும் பெண்மகள் ஒரு பாகத்தையும் அடைவார்கள்.

உதாரணம் (6) இறந்தவருக்குத் தாய், மனைவி, முன்பே இறந்த ஆண்மகனுடைய மகன், பெண் மகள் இவர்கள் உண்டு. இறந்தவருடையச் சொத்துக்கள் நான்கு பாகங்களாகச் செய்யப்பட்டு மேற்கண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு பாகம் உண்டு.

உதாரணம் (7) இறந்தவருக்கு ஒரு பெண் மகளும், முன்னதாகவே இறந்தபோன ஒரு பெண் மகளுடைய இரண்டு மகன்களும் (அதாவது பெண் வயிற்று பேரன்கள்) இரண்டு பெண்களும் (அதாவது பெண் வயிற்று பேத்திகளும்) உண்டு. இறந்தவருடைய சொத்துக்களை இரண்டு பாகங்களாகச் செய்து,

இறந்தவருடைய பெண் மகளுக்கு ஒரு பாகம் உண்டு. மற்ற பாதியை இறந்த பெண்மகளின் கிளையிலுள்ள நால்வரும், அதாவது இரண்டு பேரன்களும், இரண்டு பேத்திகளும் சமபாகமாக அடைவார்கள்.

உதாரணம் (8) இறந்த இந்துவுக்கு மனைவியும், முன்னதாகவே இறந்துபோன மகனுடைய விதவையும் உண்டு. இறந்தவருடைய சொத்துக்களை இவ்விருவரும் சமபாகமாக அடைவார்கள்.

உதாரணம் (9) இறந்த இந்துவுக்கு ஒரு விதவை மருமகள் (அதாவது முன்னதாகவே இறந்த மகனுடைய மனைவி) மட்டில் உண்டு. இறந்தவருடைய யாவற்று சொத்துக்களுக்கும் இவளே வார்சு.

உதாரணம் (10) இறந்தவருக்கு ஒரு பெண் வயிற்றுப் பேத்தியும் ஒரு சகோதரரும்தான் உண்டு. இறந்தவருடைய எல்லாச் சொத்துக்களும் பெண் வயிற்றுப் பேத்திக்கேதான் போகும். சகோதரருக்கு வார்சு பாத்தியம் இல்லை. ஏனென்றால் இவ்விருவர்களுக்குள் பெண் வயிற்றுப் பேத்திதான் முதல் வகுப்பு வார்சு. முதல் வகுப்பு வார்சுகளில் யார் ஒருவர் இருந்தாலும், அவ்வகுப்பில் இல்லாத எவருக்கும் வார்சு பாத்தியம் கிடையாது.

உதாரணம் (11) இறந்த இந்துவுக்கு ஒரு சகோதரரும், ஒரு சகோதரியும், தகப்பனும், ஒரு விதவை மருமகளும்தான் உண்டு. இறந்தவருடைய எல்லாச் சொத்துக்களுக்கும் விதவை மருமகள்தான் வார்சு. இறந்தவருடைய தகப்பனுக்கோ, சகோதரருக்கோ, சகோதரிக்கோ வார்சு பாத்தியம் ஏற்படாது. ஏனென்றால் விதவை மருமகள் முதல் வகுப்பு வார்சுகளில் ஒருவராவார். மற்றவர்களில் எவரும் முதல் வகுப்பு வார்சுகள் இல்லை.

குறிப்பு:— இந்த உதாரணங்களைப் படித்த பிறகு தயவு செய்து முதல் வகுப்பு வாரிசுகள் என்பது யார் யார் என்பதை மறுபடியும் ஊன்றி கவனித்துக் கொள்ளவும். ஏனென்றால் முதல் வகுப்பு வாரிசுகளில் ஒருவர்கூட இல்லாவிட்டால்தான் இறந்தவருடைய சொத்துக்களுக்கு வேறு உறவினர்கள் வாரிசு ஆவார்கள்.

## இரண்டாவது வகுப்பு வாரிசுகள் யார்? இவர்களுக்குள் பாகம் எப்படி?

இச்சட்டத்தின் ஷெடியூலில் இரண்டாவது வகுப்பு (class II) வாரிசுகள் யார் யார் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

அவர்களாவன:—

பிரிவு I (1) தகப்பன்

II (1) மகனின் மகளின் மகன் (2) மகனின் மகளின் மகள் (3) சகோதரர் (4) சகோதரி.

III (1) மகளின் மகனின் மகன் (2) மகளின் மகனின் மகள். (3) மகளின் மகளின் மகன் (4) மகளின் மகளின் மகள்.

IV (1) சகோதரரின் மகன் (2) சகோதரியின் மகன் (3) சகோதரரின் மகள் (4) சகோதரியின் மகள்.

V தகப்பனின் தகப்பன்; தகப்பனின் தாய்

VI தகப்பனின் விதவை; சகோதரரின் விதவை.

VII தகப்பனின் சகோதரர்; தகப்பனின் சகோதரி.

VIII தாயின் தகப்பன்; தாயின் தாய்.

IX தாயின் சகோதரர்; தாயின் சகோதரி.

[விளக்கம்:—இந்த ஷெடியூலில் சகோதரர்; சகோதரி என்று குறிப்பிடப்படும்போது ஒரே தாய்க்கு வெவ்வேறு

கணவன்கள் மூலம் பிறந்த சகோதர சகோதரிகளைக் குறிக்காது.]

முதல் வகுப்பு வார்சுகள் ஒருவரும் இல்லாவிட்டால்தான் இரண்டாம் வகுப்பு வார்சுகளுக்கு வார்சு பாத்தியம் ஏற்படும் என்பதைக் கவனித்தோம். இரண்டாவது வகுப்பு வார்சுகளில் முதல் பிரிவில் கண்ட உறவினர்கள் இருக்கும்போது மற்ற பிரிவுகளில் கண்டவர்களுக்கு வார்சு பாத்தியம் கிடையாது. இரண்டாவது பிரிவில் கண்டவர்கள் இருக்கும்போது மூன்றாவது பிரிவில் கண்டவர்களுக்கு வார்சு பாத்தியம் கிடையாது. இவ்விதமே மற்ற பிரிவுகளுக்கும். ஒரே பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்சுகள் இறந்தவருடைய சொத்துக்களைச் சமபாகமாக அடைவார்கள். இதையும் சில உதாரணங்களைக் கொண்டு விளக்கலாம்:—

செக்ஷன் 11

உதாரணம் (1):— இறந்த இந்துவுக்குத் தகப்பனும், சகோதரரும் இருக்கின்றனர். தகப்பன்தான் வார்சு. ஏனென்றால் இரண்டாவது வகுப்பில் 'தகப்பன்' முதல் பிரிவில் இருக்கிறார். 'சகோதரர்' இரண்டாவது பிரிவில்தான் இருக்கிறார்.

உதாரணம் (2):— இறந்தவருக்கு ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் உண்டு. இவ்விருவரும் இறந்தவருடைய சொத்துக்களைச் சமபாகமாக அடைவார்கள். ஏனென்றால் 'சகோதரர்' 'சகோதரி' இருவரும் இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

உதாரணம் (3):—இறந்தவருக்கு சகோதரர் மகன்கள் இருவரும் சகோதரியின் மகள்கள் நால்வரும் இருக்கின்றனர். இறந்தவருடைய சொத்துக்களை ஆறு பாகங்களாகச் செய்து ஒவ்வொருவரும், ஒரு பாகத்தை அடைவார்கள்.

## தயாதிகளுக்குள்ளும், பந்துக்களுக்குள்ளும் வார்சுக், கிரமம் எப்படி?

(உயில் எழுதி வைக்காமல் இறக்கும் இந்துவின் சொத்துக்களை முதல் வகுப்பு வார்சுகள்தான் அடைவார்கள் என்றும்; முதல் வகுப்பு வார்சுகள் ஒருவர்கூட இல்லாவிட்டால் இரண்டாம் வகுப்பு வார்சுகள் முன் சொல்லப்பட்ட வரிசைக் கிரமத்தில் அச்சொத்துக்களுக்கு வார்சு ஆவார்கள் என்பதும் விளக்கப்பட்டது. முதல் வகுப்பு வார்சுகளாகக் கண்டிருக்கும் உறவினர்களும் சரி; இரண்டாம் வகுப்பு வார்சுகளாகக் கண்டிருக்கும் உறவினர்களும் சரி - ஒருவர்கூட இல்லாவிட்டால் இறந்தவருடைய சொத்துக்களை அவருடைய தாயாதிகள் அடைவார்கள். தாயாதிகளும் ஒருவர்கூட இல்லாவிட்டால், இறந்தவருடைய பந்துக்கள்தாம் வார்சு ஆவார்கள் என்பதும் முன்பே சொல்லப்பட்டது. "தாயாதிகள்" என்பவர்கள் எவர்கள் என்றும் "பந்துக்கள்" என்பவர்கள் எவர்கள் என்றும் முன்பே விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது.)

செக்ஷன் 12-13

தாயாதிகளுக்குள்ளோ அல்லது பந்துக்களுக்குள்ளோ பலர் இருந்தால், இறந்தவருக்கு யார் வார்சு என்பதை அடியில் கண்ட விதிகளைக் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும்.

முதலில் இறந்தவருக்கும் வார்சுக்கும் உள்ள உறவு முறையானது எத்தனை தலைமுறைகள் தாண்டியதென்று பார்க்க வேண்டும். தலை முறைகள் மூதாதைகளின் தலைமுறையாகவும் இருக்கலாம்; சந்ததிகளின் தலைமுறையாகவும் இருக்கலாம்; அல்லது இரண்டும் சேர்ந்ததாகவும் இருக்கலாம். இறந்தவருடைய தலைமுறையை முதல் தலைமுறை என்று வைத்துக் கொண்டு கணக்குச் செய்யவேண்டும்.

இவ்விதம் தலைமுறைகளைக் கணக்குச் செய்துகொண்டு கீழே கண்ட விதிகளின்படி இறந்தவருக்கு யார் வார்சு என்பதை நிர்ணயம் செய்யவேண்டும். அவ்விதிகளாவன:—

விதி 1:—இரண்டு வார்சுகளுக்குள் இறந்தவருடைய மூதாதைகள் மூலம் எவருக்கு உறவு ஏற்படவில்லையோ அவர் தான் இறந்தவருடைய வார்சு ஆவார். இரண்டு வார்சுகளும் இறந்தவருடைய மூதாதைகள் மூலம் உறவு ஏற்பட்டவர்களாக இருந்தால், எவருக்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள மூதாதைத் தலைமுறைகள் குறுக்கிடுகின்றனவோ அவர்தான் வார்சு.

விதி 2:—இரண்டு வார்சுகளும் இறந்தவருடைய மூதாதைகள் மூலம் உறவு ஏற்படாதவர்களாக இருந்தாலும் சரி; அல்லது இரண்டு வார்சுகளுக்கும் இறந்தவருக்குமிடையே உள்ள மூதாதைத் தலைமுறைகளின் எண்ணிக்கை ஒன்றாகவே இருந்தாலும் சரி—எவருக்கு சந்ததித் தலைமுறை இல்லாமலோ, குறைவாகவோ இருக்கிறதோ— அவர்தான் வார்சு.

விதி 3:—மேற்கண்ட 1, 2, விதிகளின்படி இரண்டு வார்சுகளும் ஒரே நிலைமையில் இருந்தால்—இருவரும் இறந்தவருடைய வார்சு ஆவார்கள்.

உதாரணம் 1:—இறந்தவருக்குச் சகோதரரின் பேரனும், சிற்றப்பனுடைய மகனும் இருக்கிறார்கள். சகோதரரின் பேரன் தான் வார்சு. இவர் இறந்தவருடைய தகப்பனின் சந்ததி யாவார். மற்றவர் இறந்தவருடைய பாட்டனனின் சந்ததி யாவார். குறிக்கிடும் மூதாதைத் தலைமுறைகள் எவருக்குக் குறைவாக இருக்கிறதோ அவர்தான் வார்சு என்ற விதிப்படி இது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

உதாரணம் 2:—இறந்தவருக்குச் சிற்றப்பனின் மகனும் மற்றொரு சிற்றப்பனின் பேரனும் இருக்கின்றனர். இறந்தவருக்கும் இவ்விருவருக்குமிடையே மூதாதைகளின் எண்ணிக்கை ஒன்றுதான். ஏனென்றால் இருவரும் இறந்தவருடைய பாட்ட

216522

னின் சந்ததிகள்தாம். இப்படி மூதாதை[illegible] இருவருக்கும் சமமாக இருக்கும்போது எவருக்குச் சந்ததித் தலைமுறைகள் குறைவாக இருக்கிறதென்று பார்க்க வேண்டும். சிற்றப்பனின் மகனுக்குத்தான் அப்படி இருக்கிறது. அவர் தான் வார்சு.

உதாரணம் 3:—இறந்தவருக்கு ஒரு சிற்றப்பன் பேரனும் மற்றொரு சிற்றப்பன் பேரனும் இருக்கின்றனர். இருவரும் சமமான உறவினராக இருப்பதால் இருவரும் வார்சாவார்கள்.

## இந்து ஸ்திரீகளிடம் இருக்கும் சொத்துக்களில் அவர்களுக்குப் பூர்ண உரிமை உண்டு.

ஒரு இந்து ஸ்திரீக்கு இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே சொத்துக்கள் கிடைத்திருந்தாலும் சரி; இச்சட்டம் வந்த பிறகு அவளுக்குச் சொத்துக்கள் கிடைத்திருந்தாலும் சரி, அவளிடமிருக்கும் அச் சொத்துக்களில் அவளுக்குப் பூர்ண உரிமை உண்டு. அதாவது அச்சொத்துக்களை அவள் ஆயுள் வரை தான் அனுபவிக்கலாம் என்ற நிபந்தனை இல்லாமல் அச்சொத்துக்களை இஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடிய சர்வ சுதந்தர பாத்தியங்கள் அவளுக்கு உண்டு.

செக்ஷன் 14 (1)

விவரணம்:— இந்து ஸ்திரீயிடமிருக்கும் "சொத்துக்கள்" என்று மேலே சொல்லியிருப்பது ஸ்தாவர சொத்துக்களாக இருந்தாலும் சரி; ஜங்கம சொத்துக்களாக இருந்தாலும் சரி; அச்சொத்துக்கள் அவளுக்கு வார்சு பாத்தியத்தில் கிடைத்திருந்தாலும் சரி, அல்லது உயில் மூலமாகவோ, பாகம் செய்து கொண்டதாலோ, அல்லது ஜீவனும்சத்திற்காகவோ, அல்லது ஜீவனும்ச பாக்கிக்காகவோ, கிடைத்திருந்தாலும் சரி; உறவினரிடமிருந்தோ உறவினரல்லாதவரிடமிருந்தோ அவளுடைய திருமணத்திற்கு முன்போ, திருமண சமயத்திலோ

அதற்குப் பின்போ அவளுக்கு அச்சொத்துக்கள் இனமாகக் கிடைத்திருந்தாலும் சரி; அல்லது அவள் அச்சொத்துக்களைத் தம்முடைய சாமர்த்தியத்தாலோ, உழைப்பினாலோ சம்பாதித்திருந்தாலும் சரி; அல்லது அவள் அச்சொத்துக்களை கிரயம் வாங்கி இருந்தாலும் அல்லது அனுபோக பாத்தியத்தினால் அடைந்திருந்தாலும்; வேறு எவ்விதமாக அவள் அச்சொத்துக்களை அடைந்திருந்தாலும் சரி; இச்சட்டம் வருவதற்குமுன் அவை அவளுடைய ஸ்ரீதன சொத்தாக (மஞ்சக்காணி) அவளிடம் இருந்தாலும் சரி — இவை எல்லாம் இந்து ஸ்திரீயிடம் இருக்கும் "சொத்துக்கள்" என்பதில் சேர்ந்தவையே.

## ஆனால் இனம் சாசனம், உயில், வேறு பத்திரங்கள், கோர்ட்டு டிக்ரி, சிவில் கோர்ட் உத்தரவு அல்லது மத்தியஸ்தத் தீர்ப்பு இவைமூலம் இந்து ஸ்திரீக்குச் சொத்துக்களில் குறைவான பாத்தியங்களே கொடுக்கப்பட்டிருந்தால் — அது செல்லும்.

இந்து ஸ்திரீகளிடமிருக்கும் சொத்துக்களில் அவளுக்குப் பூர்ண உரிமை உண்டென்று மேலே செக்ஷன் 14(1)ல் சொல்லப்பட்டிருந்தபோதும் — அடியில் கண்ட சொத்துக்களுக்கு அந்த ஷரத்து பொருந்தாது. அதாவது இனம் சாசனத்தின் மூலமாகவோ, உயில் மூலமாகவோ, அல்லது

செக்ஷன் 14(2) வேறு பத்திரங்கள் மூலமாகவோ, கோர்ட்டு டிக்ரிப்படிக்கோ, சிவில் கோர்ட்டு உத்தரவின் படிக்கோ, அல்லது ஒரு மத்தியஸ்தத் தீர்ப்பின் மூலமாகவோ ஒரு ஸ்திரீக்குச் சொத்துக்கள் கிடைத்திருந்து— மேற்கண்ட இனம் சாசனம், உயில், பத்திரம் டிக்ரி உத்தரவு அல்லது மத்தியஸ்தத் தீர்ப்பு இவற்றில் அவளுக்கு அச்சொத்துக்களில் குறைவான பாத்தியங்களே கொடுக்கப்பட்டிருந்தால்

அவை செல்லும். (அவ்விதச் சொத்துக்களில் இந்து ஸ்திரீக் குப் பூர்ண உரிமைகள்—அதாவது விற்கச் சுட பாத்தியங்கள்—ஏற்படமாட்டா.)

உதாரணம் (1):— இச்சட்டம் வருவதற்கு முன் ஒரு இந்து இறந்தார். அவருக்குச் சந்ததி இல்லை. மனைவிமட்டில் உண்டு. இறந்தவருடைய சொத்துக்களை மனைவியானவள் வார்சு முறைமையில் அடைந்திருக்கிறாள். பழைய சட்டப்படி இச்சொத்துக்களை அவள் தம்முடைய ஆயுள்வரை அனுபவித்து வரும் உரிமைதான் அவளுக்குச் சாதாரணமாக உண்டு. அதாவது தன் இஷ்டப்படி அச்சொத்துக்களை அவள் விற்கச்சுட முடியாது. அவளுடைய ஆயுளுக்குப்பிறகு அச்சொத்துக்களை அனந்தர வார்சுகள் அடைவார்கள் என்று பழைய சட்டம் இருந்தது. ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 17-6-1956ல் இந்த நிலைமை மாறிவிட்டது. அத்தேதியில் அவள் அச் சொத்துக்களுக்கு முழு சொந்தக்காரராகிவிட்டாள். (Full owner.) அதாவது அவள் அச் சொத்துக்களை தம் இஷ்டப்படி பராதீனங்களும் விநியோகமும் செய்யலாம். உயில் மூலமாகவும் அவள் அச்சொத்துக்களை யாருக்கு வேண்டுமோ னாலும் கொடுத்துவிடலாம். இவ்வித சொத்துக்களில் அனந்தர வார்சுகளின் பாத்தியங்கள் மறைந்துவிட்டன.

உதாரணம்(2):—இச்சட்டம் வருவதற்குமுன் ஒரு இந்து இறந்தார். அவருக்கு முதல் மனைவி மூலம் பிறந்த ஆண் மகன்களும், இரண்டாவது மனைவியும் இருக்கிறார்கள். சொத்து சம்பந்தமாக முதல் மனைவியின் மகன்களுக்கும் இரண்டாவது மனைவிக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு அதை மத்தியஸ்தர்கள் தீர்த்துவிட்டனர். சில சொத்துக்களை இரண்டாவது மனைவியானவள் தம் ஆயுள்வரை எவ்வித பராதீனமும் செய்யாமல் அனுபவித்துவரவேண்டுமென்றும் அவளுக்குப் பிறகு அச்சொத்துக்களை முதல் மனைவியின் ஆண்மக்கள் அடையவேண்டுமென்றும் மத்தியஸ்தர்கள் தீர்ப்பு அளித்து இருக்கின்றனர்.

இரண்டாவது மனைவி மத்தியஸ்தத் தீர்ப்பின்படி அடையும் சொத்துக்களை அவள் அத்தீர்ப்பில் கண்டபடி அனுபவிக்க லாமே ஒழிய, இப்புதிய சட்டத்தால் அவளுக்கு லாபமில்லை.

உதாரணம் (3):—மேலே கண்ட உதாரணத்தில் மத்தியஸ்தத்தீர்ப்பு ஏற்படாமல் முதல் மனைவியின் ஆண்மக்கள் இரண்டாவது மனைவிக்கு ஒருபத்திரத்தின் மூலம் மேலேகண்ட விதம் அவளுக்குச் சொத்துக்களைக் கொடுத்திருந்தாலும்—அப்பத்திரத்தில் கண்ட பாத்தியங்கள்தாம் இரண்டாவது மனைவிக்கு உண்டு.

## இந்து ஸ்திரீ ஒருவள் இறந்தால், அவளுடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார் என்பது பற்றிய பொது விதிகள்.

செக்ஷன் 15 (1) "உயில்" என்ற மரண சாசனத்தின் மூலம் சொத்துக்களை விநியோகம் செய்யாமல் ஒரு இந்து ஸ்திரீ இறந்து போனால், அவளுடைய சொத்துக்களை கீழே 16வது செக்ஷனில் கண்ட விதிகளின்படி, அடியில் கண்டவார்சுகள் அடைவார்கள்.

அதாவது:—

(a) முதலாவதாக இறந்த ஸ்திரீயின் ஆண் மக்களும், பெண் மக்களும் கணவனும் அச்சொத்துக்களை வார்சுகளாக அடைவார்கள். (ஆண் மகனோ, பெண் மகளோ முன்பே இறந்திருந்தால் அவர்களுடைய குழந்தைகள் அடைவார்கள்.)

(b) இரண்டாவதாக,—இறந்த ஸ்திரீயின் கணவனின் வார்சுகள்.

(c) மூன்றாவதாக, இறந்த ஸ்திரீயின் தாய், தகப்பன்

(d) நான்காவதாக, இறந்த ஸ்திரீயின் தகப்பனின் வார்சுகள்.

(e) கடைசியாக, இறந்த ஸ்திரீயின் தாயின் வார்சுகள். வார்சுகள் இந்த வரிசைக்கிரமப்படி அடைவார்கள்.

## ஆனால், தகப்பன் அல்லது தாயின் வார்சாக இந்து ஸ்திரீ அடைந்த சொத்துக்களுக்கு வார்சு கிரமம் வேறு

இந்து ஸ்திரீயின் சொத்துக்களுக்கு வார்சு கிரமம் மேலே செக்ஷன் 15 (1)ல் பொதுவாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், அவள் தன்னுடைய தகப்பன் அல்லது
